TNPDCL

From
**Er.D.TAMIL SELVAN.,B.E.,**
Superintending Engineer,
TANGEDCO/CEDC/Central,
110 KV Valluvarkottam SS Complex,
Chennai – 600 034.

To
List of firms,
(As per List enclosed)

**Lr.No.SE/CEDC/C/EE/Gl/AEE/MM/AE/P1/F.Enq.No.27/25-26/D.1972/25,Dt.26.12.2025**

Sir,

**Sub:** Elecy. – CEDC/C – Hiring of Diesel driven jeep model vehicle 1 No. main vehicle and 1No. spare vehicle for official use of Assistant Executive Engineer/ MRT/ Protection in CEDC/Central under K2 Agreement – Limited tender called for - Reg.

** ** **

For and on behalf of the TANGEDCO sealed tenders are invited by the undersigned for the following works under K2 agreement.

| Sl. No | Name of work and Value | Enquiry No. | Cost of Specifi-cation | EMD to be paid per FOC Centre Rs. P. | Due date for receiving and opening of Tender and time |
|---|---|---|---|---|---|
| 1 | Hiring of Diesel driven jeep model vehicles 1 No. main vehicle and 1 No. spare vehicle for official use of Assistant Executive Engineer/ MRT/Protection in CEDC/Central under K2 Agreement for a period of Two years. (Rs.50,000/per month) | E.No. 27/25-26 Dt. 26. 12.25 | Rs.250/- (Inside & Outside TN) Postal charges Rs.100/- Extra | Rs.12000/ | 22.01 .26 **15.00 hrs.** |

Sale of specification will be closed on 2.30 PM on the previous working day of due date for opening of Tender.

The tender set can be had from the Asst. Executive Engineer/Material Management during office hours by submitting a requisition specifying the Specn. No. along with the receipt for payment of the cost of tender documents.

The cost of tender set once remitted will be neither refunded nor adjusted under any circumstances.

Tender documents are available in TNPDCL web site (www.tangedco.gov.in) and the prospective bidders may get the specification downloading from the above mentioned website at free of cost.

The undersigned reserves all the right to reject any or all tenders without assigning any reasons therefor.

Sd/xxx
**SUPERINTENDING ENGINEER**
**CEDC/CENTRAL**

Copy submitted to the Chief Engineer/Distrn./Chennai North Region }
Copy submitted to the Chief Engineer/Distrn./Chennai South Region }
Copy to the Superintending Engineer/CEDC/North, South and West }
Copy to the All Executive Engineers of this circle } **
Copy to the Superintending Engineer/CDC, GCC, Operation and MM }

** They are requested to display this tender notice in their office notice Board and give vide publicity.

Copy to the AAO/Cash/CEDC/Central

## ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கைகளின் கீழ்க்கண்ட விபரங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்

1. ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலா் பெயா் பதவி, முகவரி — மேற்பார்வை பொறியாளர் ,
சென்னை மின் பகிர்மான வட்டம்- மையம்.
நுங்கம்பாக்கம், சென்னை — 34.

2. அ) திட்டத்தின் பெயர் / கொள்முதல் மற்றும் செய்யப்படும் பணிகள் சம்பந்தமான விவரம். - சென்னை மின் பகிர்மான வட்டம்/ மையம்.
வட்டத்தில் உள்ள **உதவி செயற் பொறியாளா் / மின் அளவை ஆய்வு சோதனை /பாதுகாப்பு** அவா்களின் ஆய்வபணி மற்றும் தொடர்பான வேலைகளுக்கான டீசலில் இயங்கும் ஜீப் (Jeep) மாடல் வண்டிகள் வாடகைக்கு பெறுதல்.

ஆ)) பணி அல்லது கொள்முதல் நடைபெறும் மாவட்டங்களின் பெயர்கள் - சென்னை மின் பகிர்மான வட்டம்/ மையம்.
மே.பா.பொ/செ.மி.ப.வ/ மையம் 27 /25-26

3. எந்த இடத்தில் எந்த தேதிவரை ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கும் என்ன விபரம வரை - WWW.tneb.in இணையதளம் முலமாக.
**21.01.2026** பிற்பகல் 2.30 மணி

4. செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத தொகை விபரம் - **ரூ.12000/-**

5. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் நேரம் மற்றும் இடம் - **22.01.2026** பிற்பகல் 2.30 மணி
**இடம்** - மேலே 3-ல் குறிப்பிட்டுள்ளபடி.

6. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் நேரம் மற்றும் இடம் - **22.01.2026** பிற்பகல் 3.00 மணி
**இடம்** - மேலே 3-ல் குறிப்பிட்டுள்ளபடி.

7. ஒப்பந்தப்புள்ளி அலுவலா் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமானது தகவல்.

   1. மெயின் மற்றும் மாற்று ஊர்திகளின் முதல் பதிவு தேதி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட நாளுக்கு முன்பாக **ஐந்து வருடத்திற்குள்** பதிவு செய்யப்பட்ட வண்டியாக இருக்க வேண்டும்.
   2. ஓப்பந்ததாரரால் வாரியத்திற்கு வாடகைக்கு தரப்படும் மெயின் ஊர்திகள் அவருடைய பெயரில் இருக்க வேண்டும். .
   3. ஒப்பந்ததாரா் ஒரு ஊர்தி மெயின் ஊர்தியாகவும் ஒரு ஊர்தி மாற்று ஊர்தியாகவும் வழங்க வேண்டும்.

மேற்கூறிய விலைகேட்பு தகுதி தேவைகளை நிறைவு செய்யாத ஒப்பந்ததாரருடைய விலைப்புள்ளி ஒட்டுமொத்தமாக உடனே தள்ளுபடி செய்யப்படும்.

மேற்பார்வை பொறியாளர்
சென்னை மின் பகிர்மான வட்டம், மையம்.

மேற்பார்வைப் பொறியாளர் /சென்னை மின்பகிர்மான வட்டம் மையம்.

விவரக் குறிப்பீடு எண். 27 / 25-26

# பிரிவு I

## விலை கேட்பு தகுதி தேவைகள் (Bid Qualification Requirement)

**கீழ்க்கண்ட விலைகேட்பு தகுதி தேவைகளை நிறைவு செய்யும் ஒப்பந்ததாரர்கள் விலை கேட்புக்கு தகுதியுடையவர் ஆவார்கள்.**

1. மெயின் மற்றும் மாற்று ஊர்திகளின் முதல் பதிவு தேதி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட நாளுக்கு முன்பாக 5 **வருடத்திற்குள்** பதிவு செய்யப்பட்ட வண்டியாக இருக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரரால் வாரியத்திற்கு வாடகைக்கு தரப்படும் மெயின் ஊர்திகள் அவருடைய பெயரில் இருக்க வேண்டும்.

3. ஒப்பந்ததாரர் ஒரு ஊர்தி மெயின் ஊர்தியாகவும் ஒரு ஊர்தி மாற்று ஊர்தியாகவும் வழங்க வேண்டும்.

மேற்கூறிய விலைகேட்பு தகுதி தேவைகளை நிறைவு செய்யாத ஒப்பந்ததாரருடைய விலைப் புள்ளி ஒட்டு மொத்தமாக உடனே தள்ளுபடி செய்யப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம்

# பிரிவு **II**

. <u>முன் வைப்புத் தொகை – **(E.M.D.)**</u>

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புபவர்களால் ரூ.12000/- (ரூபாய் முன் வைப்புத் தொகையாக ஏதாவது ஒரு அட்டவணை வங்கியிலிருந்து (ஷெட்டியூல்டு பேங்க்) கேட்பு வரைவோலை ( டிமாண்ட் டிராப்ட்) மேற்பார்வை பொறியாளார்/சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம் / சென்னை–34. **(Superintending Engineer/CEDC/Central, Chennai)** என எழுதப்பட்டதாகப் பெறப்படவேண்டும்.

**காசோலை அல்லது வங்கியினர் தரும் பொறுப்புறுதி (பாங்க் கியாரண்டி) முன்வைப்புத்தொகையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. காசோலை அல்லது பொறுப்புறுதியுடன் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்பபடும். முன் வைப்புத்தொகை முழுமையாக செலுத்தப்படாமல் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் தந்தி மூலம் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் தள்ளுபடி செய்யப்படும்.**

மேலும் முன் வைப்புத் தொகை (**E.M.D.**) **RTGS/NEFT** முறையில் கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.
வங்கி கணக்கு எண் – 0911201006145
வங்கி பெயர் – **கனரா வங்கி**
**IFSC CODE – CNRB0000911**

ஒப்பந்தம் வழங்கப்பட்டவருக்கு அவர் ஒப்பந்த வேலையை மனநிறைவு தரும் வகையில் செய்து முடித்த பின்னரே **முன் வைப்புத் தொகை திருப்பித் தரப்படும்.** வாரியத்திடமிருந்து ஒப்பந்த வேலைக்கு ஆணை பெறுவோர் வணிக மற்றும் பிற விதி முறைகளிலுள்ள 18ம் பகுதியின்படி ஒப்பந்த தொகையின் 5 விழுக்காடு தொகையை பிணை வைப்புத்தொகையாக (செக்யூரிட்டி டொபசிட்) **முப்பது** நாட்களுக்குள் (30 days) செலுத்தவேண்டும். பிணை வைப்புத்தொகை செலுத்த தவறுபவர் அல்லது ஒப்பந்தத்திலிருந்து பின் வாங்குபவர் அவருடைய முன்வைப்புத் தொகையை இழந்துவிடுவார், அவருக்கு முன் வைப்புத்தொகை திருப்பிததரப்பட இயலாது. மேலும் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

ஒப்பந்தப்புள்ளியில் சமர்பிக்கப்படும் ஆவணங்களில் பொய்யான தகவல்கள் இருந்தாலோ அல்லது இணைக்கப்பட்ட ஆவணங்கள் போலி (Bogus) என்று கண்டுபிடிக்கப்பட்டாலோ, ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்படுவதுடன் ஒப்பந்ததாரர் அவருடைய முன் வைப்புத் தொகையை இழந்துவிடுவார்.

ஒப்பந்தம் வழங்கப்படாதவர்களுக்கு அஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும். அவர்கள் மேற்பார்வை பொறியாளர் / சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம் அவர்களுக்கு முன்வைப்புத் தொகையைத் திருப்பித் தருமாறு கேட்பு மனு கொடுத்த பிறகு முன் வைப்புத் தொகையைத் திருப்பித் தரப்படும். முன் வைப்புத் தொகைக்கு வட்டி கொடுக்கப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம்

# பிரிவு III

## மேற்பார்வை பொறியாளர் / சென்னை மின்பகிர்மான வட்டம் / மையம்
## விவரக் குறிப்பீடு எண். 27 / **2025-26**

1. ஓப்பந்தப்புள்ளி கொடுப்பவர்களுக்கு அறிவுரை –

**சென்னை மின் பகிர்மான வட்டம்/ மையம் வட்டத்தில் உள்ள உதவி செயற் பொறியாளர் / மின் அளவை ஆய்வு சோதனை /பாதுகாப்பு** அவர்களின் ஆய்வபணி மற்றும் அதன் தொடர்பான வேலைகளுக்கான டீசலில் இயங்கும் ஜீப் **(Jeep)** மாடல் வண்டிகள் ஒப்பந்த ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து **இரண்டு வருடங்களுக்கு** வாடகைக்குப் பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. இவ்விவரக் குறிப்பீட்டில் கேட்கப்பட்டுள்ள விவரங்களுடன் முன் வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரங்களுமதெளிவாக எழுதப்பட வேண்டும். ஒப்பந்த புள்ளியை உறையினுள் வைத்து அதை முத்திரையிட்டு அனுப்புமாறு ஒப்பந்ததாரர்கள் கோரப்படுகிறார்கள். மேல் உறையின் மீது கீழே குறிப்பிட்டுள்ளவற்றை தவறாமல் எழுதவேண்டும்.

விவரக் குறிப்பீடு எண். 27 / 2025-26

மேற்பார்வை பொறியாளர்
சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம்
சென்னை –34

**டீசலில் இயங்கும் வேன் / ஜீப் மாடல் வாகனங்கள் வாடகைக்கு கோருதல்**

2. ஓப்பந்தப்புள்ளி முறை – (டெண்டர் சிஸ்டம்)

" **வரைபடுத்தபட்ட ஒப்பந்தப் புள்ளி முறை** (Two Part System) " பின்பற்றப்படும். ஒப்பந்ததாரர்கள் வாடகை கட்டணமமற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரக் குறிப்பீட்டில் கோரப்பட்டுள்ள கீழ்க்கண்ட தகவலுக்கான பதில்களை இரட்டிப்பு படியில் (டூப்ளிகேட்) தரவேண்டும்.

அ
1. ஒப்பந்ததாரர் குறைந்தது ஒரு மெயின் ஊர்தி வழங்க வேண்டும். மேலும் ஒரு ஊர்தி மாற்று ஊர்தியாக வழங்க வேண்டும். ( மெயின் 1 + மாற்று 1 )
2. ஒப்பந்ததாரரால் வாரியத்திற்கு வாடகைக்கு தரப்படும் மெயின் ஊர்திகள் அவருடைய பெயரில் இருக்க வேண்டும். மாற்று ஊர்திகள் அவருடைய பெயரிலோ அல்லது வேறொருவர் பெயரிலோ பதிவு செய்யப்பட்டிருக்கலாம். வேறு பெயரிலுள்ள வண்டிகளாயிருந்தால், ஒப்பந்ததாரர் அவரிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்று அதனை ஒப்பந்தப்புள்ளியுடன் அனுப்ப வேண்டும். ஒப்பந்தக் கடிதத்தில் வாரியத்திற்கு தமது வண்டிகளை ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த காலம் முடியும் வரை வாடகைக்கு விட முழு சம்மதமும் தெரிவித்திருக்க வேண்டும்.
3. 2–ல் கூறப்படும் ஊர்திகளின் ஆர்சி சான்றிதழ் ஏடு, ஈட்டுறுதி ஆவணம் போக்குவரத்து அனுமதி ஏடு ஆகிய ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள் (Attested Copy) இணைக்கப்பட வேண்டும்.
4. வாடகைக்கு தரப்படும் அனைத்து (ஒப்பந்தகாரரின் பெயரிலுள்ள, பிறரிடமிருந்து ஒப்புதல் தரக்கூடிய) டீசலில் இயங்கும் வேன் / ஜீப் மாடல் வாகனங்கள பற்றிய குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ள படிவம்–II–ல குறிப்பிட வேண்டும்.
5. / தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேற்படி கடிதத்தில் சொந்தக்காரரின் முழுப் பெயரும் முகவரியும் ஊர்தி ஒப்பந்ததாரரின் பெயரில் இல்லாத பிற ஊர்திகளுக்கு சொந்தக்காரரின் ஒப்புதல் கடிதம் இணைக்கப்பட வேண்டும். சொந்தக்காரரால் கையெழுத்திடப்பட்டுள்ள ஒப்புதல் கடிதம் நேர்த்தியாக எழுதப்பட்டு தெளிவாக குறிப்பிடப்படவேண்டும்.

6.. ஈட்டுதறுதி தொகை செலுத்தப்பட்ட ரசீதின் சான்றொப்பமிட்ட நகல் இணைக்கப்பட வேண்டும்.

7. ஊர்தியின் உரிமம், பதிவு எண், பதிவு தேதி, ஊர்தி தயாரிப்பு (மாடல்) ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ள பதிவுச் சான்றிதழ் ஏட்டின் (ஆர்.சி. புத்தகம்) பக்கங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள் (Attested Copy) அனுப்பப்பட வேண்டும். வாடகைக்கு கொடுக்கப்படவிருக்கும் ஒவ்வொரு ஊர்திக்கும் (மாற்று ஊர்தி உட்பட) மேற்படி விவரங்கள் தவறாமல் கொடுக்கப்பட வேண்டும்.

8. போக்குவரத்து அனுமதி ஏட்டின் சான்றொப்பமிட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

9.. விவரக் குறிப்பீட்டில் உள்ள அனைத்து வணிக மற்றும் பிற விதிமுறைகளை வரையறுப்பதற்கான ஒப்புதல், ஒப்பந்தப் புள்ளியில் தெரிவிக்கப்படவேண்டும்.

10. வாடகை கட்டணம் விவரக் குறிப்பீட்டில் பழவம் 1 ல் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிடவெண்டும். மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களுடன் உள்ள ஒப்பந்தப்புள்ளி ஒரு உள்உறையில் (Inner cover) வைக்கப்பட்டு இந்த உள்உறை மூடப்பட்டு முத்திரையிடப்படவேண்டும். அந்த உள் உறையின் மீது பெறுநரின் முகவரி கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கவேண்டும்..

மேற்பார்வை பொறியாளர்
சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை — 34

உள் உறை மற்றும் முன் வைப்புத் தொகை (E.M.D) செலுத்தப்பட்டதற்கான இரசீது ஆகிய இரண்டும் மற்றொரு பெரிய உறையினுள் (Outer cover) வைக்கப்படவேண்டும்.

மேற்படி வெளி உறையின் மேல் பெறுநரின் முகவரி கீழக்கண்டவாறு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மேற்பார்வை பொறியாளர்
சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை — 34

நன்கு மூடி முத்திரையிடப்பட்ட வெளி உறை மேலே விவரக்குறிப்பீடு எண் மற்றும் பணியின் விவரம் குறிப்பிடப்பட்டு முகவரியாளருக்கு **22 .01.2026** அன்று பிற்பகல் 2.30 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பப்படவேண்டும்.

மேற்கண்ட இரு உறைகளில் கோரப்பட்டவாறு வரப்பெறாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம்

# பிரிவு **IV**

1. <u>பொது நிபந்தனைகள் **(General Terms) :-**</u>

ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவருக்கு இவ்விவரக் குறிப்பீட்டில் கூறப்பட்டுள்ளவற்றைப் பற்றிய விளக்கம் ஏதாவது தேவைப்படின் அவர் உடனே அது குறித்து மேற்பார்வைப் பொறியாளருக்கு கடிதம் எழுத வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதற்கான கடைசி நாளுக்கு முன்பாகவே அவர் தேவையான விளக்கங்களைப் பெற்றிட வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான இறுதி நாள் அன்று பிற்பகல் 2.30 மணியளவில் ஒப்பந்தப் புள்ளி உறைகள், அவ்வமயம் இருக்க விரும்பும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒவ்வொரு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி உறை திறக்கப்பட்டு அதற்குள் முன் வைப்புத் தொகை (ஈ.எம்.டி) செலுத்தியதற்கான இரசீது, கேட்பு காசோலை (டிமான்ட் டிராப்ட்) போன்ற ஏதும் உறை A அல்லது வெளியுறையில் இல்லையென்றால் அந்த ஒப்பந்தப்புள்ளி உடனே தள்ளுபடி செய்யப்படும்.

3. மேற்பார்வை பொறியாளர் சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம் / சென்னை –34 அவர்களுக்கு கீழக்கண்டவற்றை முடிவு செய்ய முழு உரிமை உண்டு.

அ. ஒப்பந்தப்புள்ளியில் சமர்பிக்கப்படும் மெயின் ஊர்திகளின் ஒரிஜினல் ஆவணங்களை ஒப்பந்த ஆணை வழங்குவதற்கு முன்போ அல்லது அதன் பிறகோ சரிபார்ப்பது, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தினால் கோரப்படும் ஒரிஜினல் ஆவணங்களை சமர்பிக்க இயலாத ஒப்பந்ததாரருடைய ஒப்பந்தப்புள்ளியை தள்ளுபடி செய்வது அல்லது ஒப்பந்த ஆணையினை ரத்து செய்வது.

ஆ. மெயின் ஊர்திகளின் ஒரிஜினல் ஆவணங்களை சரிபார்ப்பது, மாற்று ஊர்திகளுக்கு ஒப்பந்த புள்ளியில் சமர்ப்பித்துள்ள சான்றொப்பமிட்ட நகல்களை பொறுத்து ஒப்பந்த ஆணை வழங்குவது, தேவைப்படின் அந்த மாற்று ஊர்திகளின் ஒரிஜினல் ஆவணங்களை எந்த நேரத்திலும் ஒப்பந்த ஆணை வழங்கும் முன்போ அல்லது வழங்கிய பிறகோ சரிபார்ப்பது. ஏற்கனவே சமர்பித்துள்ள ஆவணங்களில் ஏதேனும் போலி என அறியப்பட்டால் வழங்கப்பட்ட ஒப்பந்த ஆணையை ரத்து செய்வது.

இ. மிக குறைந்த கட்டணம் உள்ள ஒப்பந்தப் புள்ளியை அல்லது வேறு ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது.

ஈ. ஒப்பந்த வேலையை ஒரே ஒப்பந்ததாரருக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவருக்கோ வழங்குவது.

உ. எக்காரணத்தையும் தெரிவிக்காமல் ஏதாவது ஒரு ஒப்பந்தப்புள்ளியை / ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாவற்றையும் தள்ளுபடி செய்வது.

ஊ. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மேலான நலனைக் கருதி இவ்விவரக் குறிப்பீட்டில் உள்ள விதிமுறைகளைத் தளர்த்துவது அல்லது நீக்குவது.

**கேட்கப்பட்டுள்ள முழு விவரங்கள் இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படலாம்.**

4. ஒப்பந்ததாரர் தம்முடைய அலுவலகத்தின் சரியான முகவரியை முழுமையாக ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடவேண்டும். அத்துடன் அலுவலகத்தில் தொலைபேசி/கைபேசி இணைப்பு இருந்தால் தொலைபேசி/கைபேசி எண்ணையும் தவறாமல் குறிப்பிடவேண்டும். தேவையெனக் கருதும் போது தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அதிகாரிகள் ஒப்பந்ததாரர் அலுவலகத்தைப் பார்வையிட உதவும் வகையில் விளக்கமாக தரப்படவேண்டும்.

5. உரிய நாளில் உரிய நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. ஒப்பந்ததாரர் தனிப்பட்ட நபராக இருப்பின் ஒப்பந்தப்புள்ளியில் அவரே கையெழுத்திட்டு அவருடைய பெயரையும் முகவரியையும் முழுமையாகவும் சரியாகவும் குறிப்பிடவேண்டும். ஒப்பந்தப் புள்ளி ஒரு நிறுவனத்தின் பெயரில் அனுப்பப்பட்டால் அதில் அந்நிறுவனத்தின் சார்பாக நிறுவன உறுப்பினர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு உறுப்பினர் கையெழுத்திட வேண்டும்

   அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டதற்கான சரியான சான்றையும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். ஒப்பந்தப்புள்ளி அனுப்பும் இத்தகைய நிறுவனம் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடமிருந்து ஒப்பந்த ஆணை (கான்ட்ராக்ட் ஆர்டர்) பெற்றால் உடன்படிக்கை (அக்ரிமெண்ட்) செய்து கொள்ளுமுன் நிறுவனம் இயங்குகிறதா, இல்லையா என்பதற்காக சான்றினை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அளிக்கவேண்டும்.

7. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஒப்பந்த ஆணையை எந்த நேரத்திலும் எக்காரணமும் குறிப்பிடாமலோ ஒப்பந்ததாரருக்கு எந்தவிதமான முன் அறிவிப்பும் தராமலோ ஒப்பந்தத்தினை ரத்து செய்யும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

8. ஒப்பந்ததாரர் குறைந்தது 2 ஊர்திகளை ( 1 மெயின் ஊர்தி + 1 மாற்று ஊர்தி ) வாடகைக்கு தருதல் வேண்டும். அவ்விதம் இயலாதவரது ஒப்பந்தம் தள்ளுபடி செய்யப்படும்.

9. திறனற்ற செயலாக்கம் ( Poor Performance ) உடைய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்படாததுடன் தள்ளுபடி செய்யப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம்

# <u>பிரிவு V</u>

## <u>வணிக மற்றும் பிற விதிமுறைகள்</u>

## விவரக் குறிப்பீடு 27/ 25-26

1. <u>நோக்கம்</u>

சென்னை மின் பகிர்மான வட்டம்/ மையம் வட்டத்தில் உள்ள **உதவி செயற் பொறியாளர் / மின் அளவை ஆய்வு சோதனை /பாதுகாப்பு** அவர்களின் ஆய்வபணி மற்றும் அதன் தொடர்பான வேலைகளுக்கான டீசலில் இயங்கும் ஜீப் **(Jeep)** மாடல் வண்டிகள் ஒப்பந்த ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து **இரண்டு வருடங்களுக்கு** வாடகைக்குப் பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. வண்டிகள் வாடகைக்கு இயக்க கோரல் இவ்விவரக் குறிப்பீட்டின் நோக்கமாகும்.

2. <u>வண்டிகளின் விவரிப்பு</u>

அ. ஒப்பந்ததாரரால் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வாடகைக்கு தரப்படும் மெயின் ஊர்திகள் அவருடைய பெயரில் இருக்க வேண்டும். மாற்று ஊர்திகள் அவருடைய பெயரிலோ அல்லது வேறொருவர் பெயரிலோ பதிவு செய்யப்பட்டிருக்கலாம். வேறு பெயரிலுள்ள வண்டிகளாயிருந்தால், ஒப்பந்ததாரர் அவரிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்று அதனை ஒப்பந்தப்புள்ளியுடன் அனுப்ப வேண்டும். ஒப்பந்தக் கடிதத்தில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு தமது வண்டிகளை ஒப்பந்ததாரர் முலம் வாடகைக்கு விட முழு சம்மதமும் தெரிவித்திருக்க வேண்டும்.

ஆ. மெயின் மற்றும் மாற்று ஊர்திகள் போக்குவரத்து ஊர்திகளாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இ. மெயின் மற்றும் மாற்று ஊர்திகளின் முதல் பதிவுத் தேதி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட நாளுக்கு முன்பாக 5 **வருடத்திற்குள்** பதிவு செய்யப்பட்ட வண்டியாக இருக்க வேண்டும்.

ஈ. ஒப்பந்ததாரர் குறைந்தது இரண்டு ஊர்திகளை ( ஒரு மெயின் ஊர்தி, + ஒரு மாற்று ஊர்தி ) வாடகைக்கு தருதல் வேண்டும்.

உ. ஒப்பந்த ஆணை ஒப்பந்தக்காரர் / நிறுவனம் பெயரில் மட்டுமே வழங்கப்படும்

ஊ. ஊர்தியின் பதிவு எண் மஞ்சள் பலகையில் கருப்பு வண்ணத்தில் இருக்கவேண்டும்.

எ. வாடகை ஊர்தியினரால் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு இழப்புகள் விபத்து போன்ற பிற இன்னல்கள் ஏற்படாமல் காக்கும் பொருட்டு இயக்கூர்திகள் சட்டப்படி ஊர்திகள் ஈட்டுறுதி செய்யப்பட்டிருக்கவேண்டும் (Third party risk insurance)

ஏ. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஊழியர்களின் குடும்பத்தினர்களுக்கு சொந்தமான ஊர்திகள் வாடகைக்கு விடப்படக்கூடாது.

ஐ. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தரப்படும் ஊர்திகள் ஒப்பந்த ஆணை காலத்தில் வேறு எங்குமே ஒப்பந்த ஆணையில் இயங்கக் கூடாது.

**மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் பின்பற்றப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.**

3. <u>வண்டிகள் கொடுக்கப்படவேண்டிய கால அளவு</u>

பின் சேர்க்கையில் ( படிவம் –III) குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளின் அலுவலகப் பணிக்கு வண்டிகள் 12 மணி நேரம் எல்லா நாட்களிலும் ஓடும் நிலையில் இருத்தல் வேண்டும்.

எந்த அலுவலருக்கு எந்த ஊர்தி இயக்க அனுமதிக்கப்பட்டதோ அந்த ஊர்தியை தவிர வேறு எந்த மாற்று ஊர்தியும் ஒப்பந்தகாலம் முடிவடையும் வரை அந்த அலுவலருக்கு இயக்கக்கூடாது.

4. <u>ஊர்திகள் ஓட்டுபவர்கள்</u>

ஒப்பந்ததாரரே வண்டி ஓட்டுபவர்களை நியமித்துக் கொள்ளவேண்டும். அவரே ஓட்டுநர்களுக்கு உரிய சம்பளம்/இதர படிகளை கொடுக்க வேண்டும்.

ஓட்டுநரிடம் உரிய செல்லத்தக்க ஓட்டுரிமை (டிரைவிங் லைசென்ஸ்) இருக்க வேண்டும்

ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் தொடங்கும் போது ஓட்டுபவருடைய ஓட்டுரிமத்தின் நகலை ஒரிஜினலுடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழக அலுவலர்கள் சரி பார்ப்பதற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. <u>மாற்று ஊர்தி</u>

மெயின் ஊர்திகளுக்கு பழுது ஏற்பட்டால் அரை மணி நேரத்திற்குள் ஒப்பந்ததாரர் அனுமதிக்கப்பட்ட மாற்று ஊர்தி அளிக்க வேண்டும். மாற்று ஊர்தி மூன்று நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்படமாட்டாது.

6. <u>எரிபொருள்</u>

ஊர்தி ஓடுவதற்குத் தேவையான எரிபொருட்கள் மற்றும் உயவுஎண்ணெய் ( லூப்ரிகேடிங் ஆயில் ) போன்ற எல்லாவற்றையும் ஒப்பந்ததாரரே அவர் செலவில் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். டீசல் தவிர வேறு எரிபொருள் உபயோகப்படுத்தப்படகூடாது.

7. <u>பழுதுகள்</u>

ஊர்திக்கு ஏற்படும் பழுதுகளை ஒப்பந்ததாரரே அவர் செலவில் சீர் செய்துகொள்ள வேண்டும். ஊர்திக்கு பழுது ஏற்பட்டால் அரை மணி நேரத்திற்குள் ஒப்பந்ததாரர் அனுமதிக்கப்பட்ட மாற்று ஊர்தியை மட்டும் அனுமதியளிக்கப்பட்ட அதிகாரிக்கு அனுப்பவேண்டும். மாற்று ஊர்தி மூன்று நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்படமாட்டாது. அனுமதிக்கப்பட்ட மாற்று ஊர்தியைத்தவிர வேறு ஊர்திகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8 <u>ஊர்தி பற்றிய குறிப்புகள்</u>

ஆர். சி. சான்றிதழ் ஏடு, ஈட்டுறுதி ஆவணங்கள் (Third party risk insurance, Tax token) ஆகியவற்றை ஒப்பாய்வுக்காக (verification) ஊர்தியை வாடகைக்கு கொடுக்கும்போது அனுமதிக்கப்பட்ட மின்கழக அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டும்.

ஒப்பந்ததாரர் தகுதி சான்றிதழை (Fitness certificate) காலாவதியாகும் முன்பே புதுப்பிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் புதுப்பித்த தகுதி சான்றிதழின் நகலை ஒரிஜினலுடன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் சரிபார்ப்பதற்கு சமர்பிக்க வேண்டும் தகுதி சான்றிதழ் காலாவதியான வண்டியினை ஒப்பந்ததாரர் எக்காரணம் கொண்டும் ஓட்டுதல் கூடாது. மேலும் ஒப்பந்ததாரர் அவ்வண்டியினை ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

9. <u>வாடகைக் கட்டணம்</u>

வாடகைக் கட்டணம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்படும்

| எண் | விளக்கம் | கட்டணம் |
|---|---|---|
| 1. | ஒரு நாள் வாடகைக்கட்டணம் டீசலில் இயங்கும் ஜீப் (Jeep) மாடல் வண்டி ஒன்றுக்கு (நாள் ஒன்றுக்கு 12 மணிநேரம் உபயோகப்படுத்த) | |
| 2. | 12 மணிநேரத்திற்கு மேல் தக்க வைக்கப்பட்டால் 1 மணிநேரத்திற்கு வாடகைக் கட்டணம் (30 மணித்துளிக்குள் இருப்பின் கணக்கில் எடுக்கப்படமாட்டாது 30 மற்றும் அதற்கு மேல் பட்ட மணித்துளிகள் ஒரு மணியாக கணக்கெடுக்கப்படும்) | |
| 3. | இரவு நேரத்தில் தக்க வைக்கப்பட்டால் வாடகைக் கட்டணம் | |
| 4. | செயல்திறன் எண்/ஒரு லிட்டர் டீசலுக்கு | |
| 5. | சரக்கு மற்றும் சேவை வரி (GST) | |

10.வாடகைக் கட்டணம் கொடுத்தல்

1) ஒப்பந்ததாரர் ஊர்தி செல்லுமிடங்களும் மற்றும் கி.மீ. ஆகியவைகளை அன்றாடம் ட்ரிப் சீட்டில் எழுதி அந்த மின்கழக அதிகாரியிடம் கையொப்பம் பெற வேண்டும்.

2) ஒப்பந்ததாரர், ஒவ்வொரு மாதம் முடிந்ததும் வாடகைக் கட்டணம் பட்டியலுடன் டீசலுக்கான ரசீது மற்றும் ட்ரிப் ஷீட்டையும் இணைத்து சம்பந்தப்பட்ட மின்கழக அதிகாரியிடம் கொடுக்கவேண்டும். அந்த அதிகாரியால் சான்றிடபட்ட பட்டியல் கிடைத்த பிறகு மேற்பார்வை பொறியாளர் ஒப்பந்ததாரருக்கு கூடிய விரைவில் பணம் பட்டுவாடா ஆவண செய்வார்.

3) பிணை வைப்புத் தொகை ஏற்பு (Security deposit approval) மற்றும் உடன்படிக்கை செயலாக்கத்திற்கு (Execution of Agreement) பின்பே வண்டி ஓட்டியதற்கான வாடகை கட்டணமானது அந்தந்த மேற்பார்வைப் பொறியாளரால் கொடுக்க ஆவண செய்யப்படும்.

11 பிடித்தம் மற்றும் தண்டத் தொகை

(i) ஊர்தி பழுதடைந்தால் ஒப்பந்ததாரர் அரை மணி நேரத்திற்குள் அனுமதிக்கப்பட்ட மாற்று ஊர்தியை மட்டும் அதிகாரியின் ஆய்வுபணிக்கு அனுப்பவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் தண்டத் தொகை கீழ்கண்டவாறு பிடித்தம் செய்யப்படும்.

அ. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஒப்பந்ததாரரிடமிருந்து ஊர்தி கொடுக்கப்படாத கால அளவுக்கு வீதப்படியான வாடகைக் கட்டணம் பிடித்தம் செய்து கொள்ளும்.

ஆ. இது தவிர கூடுதலாக தண்டத்தொகையாக கீழ்கண்ட வீதத்தில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வண்டி கொடுக்கப்படாத ஒவ்வொரு நாளுக்கும் மாத வாடகைப் பட்டியலிலிருந்து கணக்கிடப்பட்டு பிடித்தம் செய்யப்படும்.

| வ.எண் | ஒவ்வொரு மாதமும் | வண்டி கொடுக்கப்படாத ஒவ்வொரு நாளுக்கான |
|---|---|---|

| | வண்டி கொடுக்கப்படாத கால அளவு | தணடத்தொகை வீதம் |
|---|---|---|
| 1 | 1 நாள் வரை | ஒருநாள் வாடகைக் கட்டணத்தில் 10 விழுக்காடு |
| 2 | 2 நாள் வரை | ஒருநாள் வாடகைக் கட்டணத்தில் 15 விழுக்காடு |
| 3 | 3 நாள் வரை | ஒருநாள் வாடகைக் கட்டணத்தில் 20 விழுக்காடு |
| 4 | 3 நாட்களுக்கு மேல் | ஒருநாள் வாடகைக் கட்டணத்தில் 25 விழுக்காடு |

தண்டத்தொகை = வண்டி வழங்கப்படாத நாட்கள் X வாடகைக் கட்டணம் X
வண்டி கொடுக்கப்படாத நாளுக்கான தணடத்தொகை வீதம்

இ. தண்டத்தொகையை கணக்கிடுவதற்கான நோக்கத்தில் 6 மணி நேரத்திற்கு மேல் வண்டி கொடுக்கப்படாத கால அளவு ஒரு நாள் எனக் கணக்கிடப்படும்

ஈ அரசு மற்றும் பண்டிகை கால விடுமுறை நாட்களில் வண்டி கொடுக்கப்பட வில்லையெனில், வண்டி கொடுக்கப்படாத கால அளவிற்கேற்ப நாள்/மணி வாடகைக் கட்டணத்தில் 50 சதவீதம் கூடுதல் தண்டத்தொகையாக பிடித்தம் செய்யப்படும்.

(ii) தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மேல் ஊர்தி வழங்கப்படாவிடின், ஒப்பந்தத்தை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி முறித்துக்கொள்ளும் உரிமை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு உள்ளது.

12. <u>ஒப்பந்தத்தை செயலாற்ற தவறுகை</u>

குறைந்த கட்டண வீதத்தை விலை புள்ளியில் கொடுத்து ஒப்பந்த வேலையை பெற்றவர் காலத்திற்குள் ஒப்பந்த விதிகளை/வரைமுறைகளை மீறி ஊர்தி தரத் தவறினால் ஒப்பந்த விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வேறு ஒப்பந்ததாரரிடமிருந்து வாடகை வண்டிகள் பெற்று கொள்ளப்படும். வேறு ஒப்பந்ததாரரின் கட்டண வீதம் விதி முறைகளை மீறிய ஒப்பந்ததாரரின் கட்டண வீதத்தைவிட கூடுதலாக இருந்தால் விதிமுறைகளை மீறிய ஒப்பந்ததாரர் கூடுதல் தொகையை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் செலுத்தவேண்டும். குறிப்பிட்ட கால அளவுக்குள் செலுத்தாவிடில் அவருக்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கொடுக்கவேண்டிய தொகையிலிருந்து அல்லது முன் வைப்புத்தொகையிலிருந்து அல்லது இரண்டிலிருந்தும் அத்தொகை பிடித்தம் செய்யப்படும்.

13. <u>உடன்படிக்கை (அக்ரிமெண்ட்)</u>

பிணைவைப்புத் தொகை செலுத்தி அதை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஏற்றுக் கொண்ட பிறகு ஒப்பந்ததாரர் ஒப்பந்த நிறைவேற்றத்திற்காக தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துடன் ரூ.200/- (இருநூறு ரூபாய்) மதிப்புள்ள முத்திரைத்தாள்களில் அந்தந்த அலுவலரின் பணிக்கு மையத்திற்கும் தனித்தனியாக உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டும். மேற்படி உடன்படிக்கைகள் ஒப்பந்தம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் (30 Days) சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரிடம் உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டும். உடன்படிக்கை செய்துகொண்ட பிறகு தான் வாடகைக் கட்டணம் கொடுக்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் உடன்படிக்கை செய்ய தவறினால் ஒப்பந்தம் தள்ளுபடி செய்யப்படும்.

14. <u>ஒப்பந்தத்தை மனநிறைவு அளிக்குமாறு முடித்தல்</u>

ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்த வேலையை மன நிறைவளிக்கும் வகையில் நிறைவு செய்யுமாறு கோரப்படுகிறார். அவ்வாறு செய்யத் தவறிய / ஒப்பந்த விதிகளை மீறும் ஒப்பந்ததாரரது ஒப்பந்தம் ஒப்பந்த காலம் முடிவதற்குள் முறித்துக் கொள்ளப்படும். தொடர்ந்து மூன்று நாட்கள் ஒப்பந்ததாரர் அலுவலகத்திற்கு வண்டி கொடுக்காமலிருந்தால் சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரின் பரிந்துரைக்கேற்ப அவரது ஒப்பந்தம் எந்தவித முன்னறிவிப்புமின்றி முறித்துக் கொள்ளப்படும். அவரால் கொடுக்கப்படும் வண்டி மூன்று நாட்களுக்குப்பிறகு சம்பந்தப்பட்ட பொறியாளர்களால் அனுமதியின்றி

ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட வண்டிகளை மட்டுமே வாடகைக்கு கொடுக்க வேண்டும்.

15. <u>இழப்பீடு (காம்பன்சேஷன்)</u>

ஊர்திக்கு விபத்து நேரிடின், ஒப்பந்ததாரரே வேலையாள் இழப்பீடு சட்டப்படி உரிய இழப்பீடினை தரவேண்டும். தவிர ஒப்பந்ததாரரே ஓட்டுநர்க்கு உடனடியாக மருத்துவ உதவிக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். விபத்து போன்ற சம்பவங்களினால் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஏற்படக்கூடிய பொறுப்புகளுக்கு ஒப்பந்ததாரர் பொறுப்பேற்று ஈட்டுறுதி செய்யவேண்டும். அதற்கான ஒரு ஈட்டுறுதி பத்திரம் (பாண்ட) எழுதித் தரவேண்டும். ஒப்பந்ததாரர் நியாயமான கால அளவுக்குள் இழப்பீடுத் தொகையை வழங்கத் தவறினால் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமே இழப்பீட்டுத் தொகையை வழங்கிவிட்டு ஒப்பந்ததாரருக்குச் சேரவேண்டிய வாடகைக் கட்டணத்திலிருந்து அத்தொகையை பிடித்தம் செய்யும் உரிமையைத் தன்னகத்தே கொணடுள்ளது.

16. <u>இயக்கூர்தி வரியும் அனுமதி சீட்டும் (பெர்மிட்)</u>

இயக்கூர்தி வரியை ஒப்பந்ததாரரே செலுத்தவேண்டும். மேலும் அவரே சென்னை மின் பகிர்மான வட்டங்களின் எல்லைக்குள் ஊர்தி ஓட்டுவதற்கான அனுமதிச் சீட்டையும் (Transport permit) பெறவேண்டும்.

17. <u>பொது</u>

அ) ஒப்பந்த விதிகளை ஒப்பந்ததாரரோ அல்லது அவரது ஓட்டுநர்களோ மீறினால், அதற்கான முழுப் பொறுப்பும் ஒப்பந்ததாரரையேச் சேரும்.

ஆ) தகராறு ஏதேனும் ஏற்பட்டால் மேற்பார்வை பொறியாளரின் முடிவு தான் இறுதியானது. அதுவே ஒப்பந்ததாரரையும் கட்டுப்படுத்தும்.

இ) ஒப்பந்தம் மாற்றிக் கொள்ளத் தக்கதல்ல.

ஈ) ஒப்பந்ததாரருக்கு ஏதேனும் அறிவிப்பு (நோட்டிஸ்) கொடுக்க நேரிட்டால், அது அவருடைய வழக்கமான அல்லது அவரால் கடைசியாகத் தெரிவிக்கப்பட்ட அலுவலக முகவரியில் கொடுக்கப்படும். இவ்வாறு அளிக்கப்படும் அறிவிப்பு முறையாக கொடுக்கப்பட்ட அறிவிப்பாக கருதப்படும். முகவரியில் மாற்றம் ஏதும் இருப்பின் அதை சம்பந்தப்பட்ட மின்கழக அதிகாரிகளுக்குத் அவ்வப்போது தெரியப்படுத்த வேண்டும்.

உ) கொடுக்கப்பட்ட ஒப்பந்த வேலையை சிக்கலின்றி செயல்படுத்துவதற்கு ஒப்பந்ததாரரின் முழு ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஊ) அமர்த்தப்படும் வாடகை ஊர்தியின் மீது தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஒப்பந்த ஊர்தி (<u>on contract with TANGEDCO</u>) என்று ஒரு அட்டையில் எழுதி வண்டியின் முன் மற்றும் பின் கண்ணாடியின் உட்புறம் நன்கு படிக்கும் அளவுக்கு பொருத்தவேண்டும்.

18. <u>பிணை வைப்புத் தொகை</u>

ஒப்பந்த வேலை கிடைக்கப்பெறும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை முறையாக நிறைவேற்றாமல் ஒப்பந்த கால முடிவிற்குள் முறித்துக்கொண்டால் ஏற்படக்கூடிய இழப்பை ஈடுகட்டுவதற்கு கீழ்கண்டவாறு பிணை வைப்புதொகை (செக்யூரிட்டி டிபாசிட்) செலுத்தவேண்டும்.

ஒப்பந்ததாரர் ஒப்பந்த ஆணை பெற்ற தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஒப்பந்த பார்வை மதிப்பு தொகையின் 5 விழுக்காடு தொகையை கீழ்கண்டவாரு மற்றும் ஏற்கனவே செலுத்தியுள்ள முன் வைப்புத் தொகை நீங்கலாக பிணை வைப்புத் தொகையாக (Security Deposit) ரொக்கமாகவோ அல்லது கேட்பு காசோலையாகவோ (Demand Draft)

செலுத்தவேண்டும் அவ்விதம் 30 நாட்களுக்குள் பிணை வைப்புத் தொகை செலுத்தாத பட்சத்தில் முன் அறிவிப்பு ஏதுமின்றி ஒப்பந்தம் இரத்து செய்யப்படும்.

ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரர் ஊர்தியை தடையின்றி தராமலிருந்து அதன் விளைவாக ஒப்பந்த முறிவு செய்ய நேரிட்டாலோ அல்லது அவருடைய ஊழியரின் கவனக்குறைவினால் சேதம் / இழப்பு ஏற்பட்டாலோ அல்லது ஒப்பந்தத்தில் ஏற்படும் பிரச்சினைகளால் ஒப்பந்ததாரரிடமிருந்து பணப்பிடித்தம் செய்ய நேர்ந்தாலோ ஒப்பந்ததாரரின் முன் வைப்புத் தொகை மற்றும் பிணை வைப்புத் தொகையிலிருந்து ஒரு பகுதியையோ அல்லது முழுமையையுமோ தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் பிடித்தம் செய்யப்படும். இது தவிர ஒப்பந்ததாரரின் மீது ஒப்பந்தத்தை மீறியதற்கான சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்படும். அவ்விதம் பிடித்தம் செய்யப்பட்ட தொகை எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்ததாரருக்கு திருப்பித் தரப்படமாட்டாது.

19. <u>வருமான வரி</u>

ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் வருமான வரி நிரந்திர கணக்கு எண் ( PAN NO. ) தவறாமல் குறிப்பிட்டு அதனுடைய நகலை ஒப்பந்த புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

20. <u>விற்பனை வரி</u>

இந்த ஒப்பந்த வேலைக்காக தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் எந்தவிதமான விற்பனை வரியும் கொடுக்காது.

21 <u>சரக்கு மற்றும் சேவை வரி</u> (GST)

ஒப்பந்ததாரர் சரக்கு மற்றும் சேவை வரி (GST)பதிவு எண். சரக்கு மற்றும் சேவை வரி (GST) குறியீடு மற்றும் கணக்கு குறியீடு போன்ற விவரங்களை வழங்க வேண்டும். சரக்கு மற்றும் சேவை வரி (GST)செலுத்துவது சம்பந்தப்பட்ட சேவை வரி அதிகாரியிடம் ஒப்பந்ததாரரே நிறைவேற்ற வேண்டும் என்றும் ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டபின் ஏற்படும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) பற்றிய பொறுப்பு எதனையும் மின் வாரியம் பொறுப்பேற்க வேண்டியதில்லை என்றும் ஒப்பந்ததாரர் உறுதிமொழி அளிக்க வேண்டும், மேலும் ஒப்பந்ததாரர் இந்த தொழில் தொடர்பு சம்பந்தமாக சரக்கு மற்றும் சேவை வரி (GST)) ஏய்ப்பு ஏதேனும் செய்தால். சரக்கு மற்றும் சேவை வரி (GST )தொடர்பான மேல் நடவடிக்கைக்கு வாரியம் எவ்வித பொறுப்பும் ஏற்காது என்பதற்கான உறுதிமொழியையும், ஒப்புதலையும் அளிக்க வேண்டும்,இந்த தொகையை பெற ஒவ்வொரு மாத பட்டியலுடன் போக்குவரத்து நிறுவனம் அல்லது வாகன ஒப்பந்ததாரர் சரக்கு மற்றும் சேவை வரி (GST) குழுவினரிடம் பதிவு செய்யப்பட்டதற்கு தேவையான ஆவணங்களை (சான்றொப்பமிடப்பட்ட நிழற்பட நகல்) இவ்வலுவலகத்திற்கு தர வேண்டும், சரக்கு மற்றும் சேவை வரி (GST)பதிவு எண்ணையும் இவ்வலுவலகத்திற்கு தவறாமல் குறிப்பிட வேண்டும்.

22. <u>ஒப்பந்தப் புள்ளியின் செல்லத்தக்க நிலை</u>

ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளிலிருந்து குறைந்தது 120 நாட்கள் வரை செல்லத்தக்கதாக இருக்கவேண்டும்

23. <u>சட்ட நடவடிக்கைக்களுக்கான எல்லைகள்</u>

இந்த ஒப்பந்தம் தொடர்பாக எழக்கூடிய எந்த சிக்கல் பற்றி, உரிமையியல் வழக்கு (Suit) அல்லது சட்ட நடவடிக்கைகளுக்கு சென்னை மாநகர் உரிமையியல், நீதிமன்றத்தில் அல்லது சென்னை மாநகர் சிறு வழக்கு நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்படவேண்டும். வேறு நீதிமன்றங்களின் வட்டார எல்லைகளில் வழக்கு மூலம் (cause of action) எழ நேர்ந்தாலும் அந்த நீதிமன்றங்களில் இது தொடர்பான உரிமையியல் வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பது இருசாரராலும் ஒத்துக் கொள்ளப்படுகிறது. வழக்கு மூலம்

அல்லது வழக்கு மூலத்தின் ஒரு பகுதி, சென்னை மாநகரத்திலுள்ள நீதிமன்றங்களின் வட்டார எல்லைக்கு அப்பால், தமிழ்நாட்டின் பிற நீதிமன்றங்களின் வட்டார எல்லைக்குள் நேர்ந்தால் அது தொடர்பான வழக்கை அல்லது சட்ட நடவடிக்கையை தமிழ்நாட்டின் ஒரு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்று இரு சாராராலும் ஒத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் வழக்கு மூலமோ அல்லது அதன் ஒரு பகுதியோ தமிழ்நாட்டின் எல்லைக்கு அப்பாலுள்ள நிதிமன்றங்களின் வட்டார எல்லைகளில் எழ நேர்ந்தால் அந்த நீதிமன்றங்களின் இது தொடர்பாக உரிமையியல் வழக்கை அல்லது சட்ட நடிவடிக்கை இருசாரரும் மேற்கொள்ளக்கூடாது.

மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை மின்பகிர்மான வட்டம்/ மையம்.

<u>தமிழ் நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்</u>

<u>படிவம் - 1</u>

ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி :

1. ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண் : விவரக்குறிப்பீடு எண் 27 / 25-26

2. ஊர்தியின் வடிவம் மற்றும் வகை :
(Make & Type)

3. வழங்கப்படும் ஊர்திகளின் எண்ணிக்கை :

4. ஊர்தியின் பதிவுத் எண் மற்றும் தேதி :

5. ஊர்தியின் உரிமையாளர் பெயர் :

6. போக்குவரத்து உரிமம் பெறப்பட்டுள்ளதா? : ஆம்/இல்லை

7. ஈட்டுறுதி செல்லத்தக்க தன்மையுடையதா? : ஆம்/இல்லை
( செல்லத்தகுநிலை, மதிப்புடைமை )
சான்றொப்பமிடப்பட்ட நகல்
இணைக்கப்பட்டுள்ளதா?

8. உரிமையாளரின் முழுப்பெயர் மற்றும் முகவரி:
(அலுவலகத் தகவல் பரிமாற்றங்களுக்கான முழு முகவரி) தொலைபேசி மற்றும் கைபேசி எண் விபரங்களுடன் கூடியது

9. சரக்கு மற்றும் சேவை வரியின் விவரங்கள்
( ஆவணங்களுடன் ) :

( பதிவு எண் ) :

( சரக்கு மற்றும் சேவை வரி குறியீடு ) **GST** :

( கணக்கு விதித்தொகுப்பு ):

10. நிரந்தரக் கணக்கு எண் ( PAN Number ) :

தேதி
அலுவலக முத்திரை ஒப்பந்ததாரரின் கையொப்பம்

# <u>படிவம் **II**</u>

## வாடகைக் கட்டணம்

I. வழங்கப்படும் ஊர்திகளின் பதிவு எண் மற்றும் தேதி

மெயின் ஊர்தி –

மாற்று ஊர்தி –

**II** கட்டணத்தொகை

| எண் | விளக்கம் | கட்டணம் |
|---|---|---|
| 1. | ஒரு நாள் வாடகைக்கட்டணம் டீசலில் இயங்கும் ஜீப் (Jeep) மாடல் வண்டி ஒன்றுக்கு (நாள் ஒன்றுக்கு 12 மணிநேரம் உபயோகப்படுத்த) | |
| 2. | 12 மணிநேரத்திற்கு மேல் தக்க வைக்கப்பட்டால் 1 மணிநேரத்திற்கு வாடகைக் கட்டணம் (30 மணித்துளிக்குள் இருப்பின் கணக்கில் எடுக்கப்படமாட்டாது 30 மற்றும் அதற்கு மேல் பட்ட மணித்துளிகள் ஒரு மணியாக கணக்கெடுக்கப்படும்) | |
| 3. | இரவு நேரத்தில் தக்க வைக்கப்பட்டால் வாடகைக் கட்டணம் | |
| 4. | செயல்திறன் எண்/ஒரு லிட்டர் டீசலுக்கு | |
| 5. | சரக்கு மற்றும் சேவை வரி (GST) | |

இந்த விவரக்குறிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் அதிகாரிக்கு வண்டி இயக்க சம்மதிக்கிறேன் என்று உறுதி அளிக்கிறேன்

தேதி ஒப்பந்ததாரரின் கையொப்பம்

அலுவலக முத்திரை

# <u>படிவம் – III</u>

பிறசேர்க்கை

சென்னை மின் பகிர்மான வட்டம்/ மையம் வட்டத்தில் உள்ள **உதவி செயற் பொறியாளர் / மின் அளவை ஆய்வு சோதனை /பாதுகாப்பு** அவர்களின் ஆய்வபணி மற்றும் அதன் தொடர்பான வேலைகளுக்கான டீசலில் இயங்கும் ஜீப் (Jeep) மாடல் வண்டிகள் ஒப்பந்த ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து **இரண்டு வருடங்களுக்கு** வாடகைக்குப் பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள˙ கோரப்படுகின்றன.

வ.எண் அலுவலரின்பெயா்

உதவி செயற் பொறியாளர்
மின் அளவை ஆய்வு சோதனை /பாதுகாப்பு

.

**Assistant Executive Engineer**
**MRT/Protection**